**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-060420224820

Volume: 6

Issue: 4

Month: April

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 21.01.2022

Accepted: 01.03.2022

Published: 01.04.2022

Citation:
Govindaraj, R. "Malayali Tribes Social Tradition of Keezuran Gudi." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 4, 2022, pp. 20–25.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i4.4820

*Corresponding Author:
regovindaraj@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Malayali Tribes Social Tradition of Keezuran Gudi

**Dr. R. Govindaraj**
*Assistant Professor*
*Department of Tamil, Thiagarajar College, Madurai, Tamil Nadu, India*
*https://orcid.org/0000-0002-7168-5882*

**Abstract** - This article also explains how inhabitants such as Puliuran Mozhaliyan served the people of Keehuran and understood the smell and rituals of worship.

**Key Words:** Folklore, Eastern Ghats, Javvadumalai, Tirupati, Puthurnadu, Keezhur, Keezhuran, Melveedan, Displacement, Guardian Gods, Hunting Goddess, Mariamman.

**References**

1. Mottathukkan Age-68, Melur, Puthur Nadu.
2. Vendan, age-70, Keezhoor, Puthur Nadu.
3. Renugopal, age-60, Keezhoor, Puthur Nadu.
4. Renugopal, age-60, Keezhoor, Puthur Nadu.
5. So. Govindan, age-65, Keezhoor, Puthur Nadu.
6. Chinnathukkan, age-57, Keezhur, Puthur Nadu.

# மலையாளிப் பழங்குடிகள்: கீழூரான் குடியின் சமூக மரபு

*முனைவர் ரே. கோவிந்தராஜ்*
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை

***ஆய்வுச் சுருக்கம்***

*திருப்பத்தூர் மாவட்டத்தில் அமைந்திருக்கும் ஜவ்வாதுமலை புதூர் நாட்டிற்கு உட்பட்ட கீழூர் கிராமத்தில் வாழும் மலையாளி பழங்குடிகளில் கீழூரான் குடியமைப்புக் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது. மேலும் புலியூரான் மொழலையான்போன்ற குடிகள் கீழூரான் குடியினருக்குச் சேவைகள் செய்து மணம் புரிந்து கொண்டது பற்றியும், வழிபாட்டு முறைகள் குறித்தும் இக்கட்டுரை விளக்குகிறது.*

***திறவுச் சொற்கள்:*** *கிழக்குத்தொடர்ச்சி மலை, ஜவ்வாதுமலை, திருப்பத்தூர், புதூர்நாடு, கீழூர், கீழூரான், மேல்வீடான், இடப்பெயர்வு, காவல் தெய்வங்கள், வேட்டைதெய்வம், மாரியம்மன், நாட்டுப்புறவியல்.*

கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் ஓர் அங்கமாக ஜவ்வாது மலை இருந்து வருகின்றது. இம்மலைப்பகுதி கடல் மட்டத்திலிருந்து ஆயிரத்து எழுபது மீட்டர் உயரம் கொண்டு திருப்பத்தூர், திருவண்ணாமலை, வேலூர் ஆகிய மாவட்டங்களில் பரவியுள்ளது. திருப்பத்தூர் மாவட்டத்தில் புதூர்நாடு, புங்கம்பட்டுநாடு, மற்றும் நெல்லிவாசல் நாடு ஆகிய மூன்று நாடுகளில் முப்பதிற்கும் மேற்பட்ட மலைக் கிராமங்கள் அமைந்துள்ளன.புதூர் நாடு கிராம ஊராட்சியில் அமைந்துள்ள கீழூர் கிராமத்தில் வாழும் மலையாளிப் பழங்குடிகளின் சமூக மரபு குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.

## 1. கீழூரான் குடியமைப்பு

புதூர்நாடு ஊராட்சியில் அதிக மக்கள் தொகை கொண்ட கிராமமாக கீழூர் கிராமம் இருந்து வருகின்றது. இக்கிராமத்தின் தெற்கு பகுதியில் புலியூர் கிராமமும் வடக்கு பகுதியில் கோம்பை கிராமமும் அமைந்துள்ளன. மேற்குப்பகுதியில் மேலூர் கிராமங்கள் அமைந்துள்ளன. கிழக்குப்பகுதி மலைச்சரிவான பகுதி ஆகும். இதன் அடிவாரப்பகுதியில் இருந்து சுமார் பத்துக்கிலோமீட்டர் தொலைவில் செங்கம் அமைந்துள்ளது.

மலையின் பள்ளமான பகுதியில் இவ்வூர் அமைந்துள்ளதால் கீழ்வூர் எனப் பெயர் பெற்றது. இவ்வூரின் பூர்வீககுடி கீழூரான் குடி ஆகும். இக்குடியில் பிரிந்த மற்றொரு குடி மேலூரில் மேலூரான் குடியினராக இடம் பெயர்ந்துள்ளனர். பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு கீழூரில் கீழ்வீடான், மேல் வீடான் என்ற இருகுடிகள் இருந்ததாக கள ஆய்வில் அறிய முடிகிறது. கீழ்வீடானுக்கு ஊரின் கிழக்கு திசையிலும் மேல் வீடானுக்கு மேற்குதிசையிலும் நிலபுலங்கள் இருந்திருக்கின்றன. தங்களின் நிலங்களுக்கும், குடியிருக்கும் இடத்திற்கும் வெகு தொலைவு உள்ளதாகக் கருதி மேல் வீடானுக்குரிய மலைநிலத்தில் குடியிருப்புகளை அமைத்துக்கொண்டுள்ளனர். குலதெய்வ வழிபாடு நிகழ்வின்போது கீழூருக்கு வந்து வேந்தியப்பனை வழிபடுவது வழக்கம். அப்படி ஒருசமயம் குலதெய்வ வழிபாடு நிகழ்ந்து கொண்டிருக்கும் போது மேலூரிலிருந்து வந்த மேல்வீடான்

குடியினர் குலதெய்வத்தைக்கும் பிட்டு வேந்தியப்பனை ஊர்வலமாக உலா கொண்டு வந்து ஊர் மன்றத்தில் நிறுத்துகின்றனர்.

நள்ளிரவான அச்சமயத்தில் கீழ்வூரான் குடியினர் தூங்கச் சென்ற நேரத்தில் மேலூரான் குடியினர் குலதெய்வத்தை வழிபடுவதற்கு வெகு தொலைவுள்ளதாகக் கருதி வழி பாட்டிற்குரிய பொருள்களான கொம்பு, உருமி, துடி, வாள், சாட்டை முதலான பொருள்களை ஊருக்கு வடமேற்கு திசையில் அமைந்திருந்தக் காவல் தெய்வமான பலினியம்மனையும் பெயர்த்துக்கொண்டு மேலூரான்குடிக்கு அருகில் அமர்த்தி வழிபடத் தொடங்கினர். தற்போது பலினியம்மன் என்பது பழனியம்மனாக மாற்றம் பெற்றுள்ளது. (தகவல் மோட்டதுக்கன்[1] வயது - 68) பலினியம்மன் மேலூரான் குடியின் குலதெய்வமாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## 2. கீழூரில் பிற குடியமர்வுகள்

கீழூரில் பிற குடிகளைச் சேர்ந்தவர்களும் வாழ்ந்து வருகின்றனர். புலியூரான், மொல்லையான் (மொழலையான்) புதூரான், கோமியான், வழுதலம் பட்டான், கீழானூரான், அரும்பல்பட்டான் முதலான குடியினர் வழிவந்தவர்களும் வாழ்ந்து வருகின்றனர். புலியூரான் முதலான குடியினர்கள் கீழூரான் வீட்டில் பெண் எடுக்கும்போது அப்பெண்களுக்குப் பாகப் பிரிவினைதந்து, கீழூரிலேயே குடி அமர்த்தி கொண்டுள்ளதாக களஆய்வு வழி அறிய முடிகின்றது. மேலும் கீழூரான் வீட்டில் சேவை செய்து மணம் செய்துகொண்டுள்ளனர். அவ்வாறே கீழூரான் குடியினர் கோம்பை, புலியூர், சின்னவட்டானூர், ஏலகிரி மலைப்பகுதியில் உள்ள நிலாவூர் முதலான கிராமங்களுக்குச் சென்று, சேவை மணம் செய்து கொண்டதன் மூலமாகவும் குடிபெயர்ந்துள்ளனர். குலதெய்வ வரலாறு குறித்து வேந்தன்[2] கூறுகையில் “செங்கத்திருந்து தாய் ஒருவள் இரண்டு ஆண் மக்களுடன் ஜவ்வாதுமலை கீழூர் கிராமத்திற்கு வருகின்றார்கள். அவ்வாறு வருகையில் தாய் செங்கத்திற்கு அருகில் உள்ள வளையாம் பட்டு ஏரிக்கரையிலும் மூத்தமகன் அடிவாரத்திலும் களைப்பின் காரணமாக அமர்ந்து விடுகின்றனர். இளையவன் ஜவ்வாது மலை கீழூர் கிராமத் திற்கு வருகைதரும் காலத்தில் கலியுகம் பிறந்ததால் தெய்வமாக மாறிவிட்டார்கள் என்று குறிப்பிடுகிறார்”.

சங்க இலக்கியமான “மலைபடுகடாம்” குறிப்பிடும் வரலாற்றுடன் மேற்குறிப்பிட்ட கதை ஒத்துப்போவதை அறியமுடிகிறது. இந்நூலின் பாட்டுடைத் தலைவன் நன்னன் சேய் நன்னன் எனும் குறுநிலமன்னன் ஆவான். இவன் செங்கண்மா நகரத்தை ஆட்சி செய்தக் குறிப்பினை மலைபடுகடாம் பதிவுச்செய்கிறது. சேயாறு நவீரமலையில் தோன்றிச் செங்கண் மாநகரத்திற்கு வளம் சேர்ப்பதையும் குறிப்பிடுகிறது. சேயாறு தற்பொழுது செய்யாறு ஆக மாற்றமடைந்துள்ளது. சேயாறு இன்றைய ஜவ்வாது மலையில் தோன்றி செங்கம் வழியாக வங்கக்கடல் நோக்கி செல்கிறது. மலைபடுகடாம் குறிப்பிடும் நவீர மலைப் பற்றிய பதிவு கீழூர், புதூர், மொழலை, மேல்பட்டு, சேம்பறை, நெல்லிவாசல், கோம்பை முதலான கிராமங்களில் அமைந்துள்ள கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன. இக்குறிப்புகளை வைத்துப் பார்க்கும்போது இன்றைய ஜவ்வாதுமலை “மலைபடுகடாம் குறிப்பிடும் நவிரமலையே ஆகும். செங்கத்திற்கும் ஜவ்வாதுமலை மக்களுக்கும் வணிகத்தொடர்பு தற்போது வரை இருந்து வருகிறது. குறிப்பாகக் கீழூர் மற்றும் அதன் அருகில் உள்ள மலைக் கிராமங்களில் கிடைக்கும் அனைத்து மலைபடு பொருள்களையும் தலைச்சுமையாகவே செங்கத்திற்கு எடுத்துச் சென்று விற்று, தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கி வருகின்றனர். கழுதையின் மூலமாக மலைமக்களுக்குக் கிடைக்காத ஆடைகள், உப்பு முதலான பொருட்களைக் கொடுத்து மாற்றாக புளி, சாமை, தினை, வரகு, மூலிகைகள் ஆகியவற்றைப் பெற்று சென்றுள்ளமையை தகவலாளர் வழி (ரேணு

கோபால் 3 வயது - 58 கீழூர்) புலப்படுகிறது. மலை அடிவாரப் பகுதியிலிருந்து கீழூர் கிராமத்திற்கு வால்பாறை, கூசிக்கல் என இரண்டு பழம்பெரும் வழிகள் இருந்து வருகின்றன.

கூசிக்கல் வழியில்தான் அதிகமாக மக்கள் பயணித்து இருக்கின்றனர். இப்பாதையில் பயணிகள் இளைப்பாறுவதற்கு இளையாத்தி என்கிற இடம் இருக்கின்றது. அதற்கு மேல்பகுதியில் பெரியதோர் கற்குவியல் அமைந்திருக்கிறது. இம்மலைக்கு வழிநடையாக முதல்முறையாக வருகின்றவர்கள் ஒருகல்லைத் தூக்கி போட்டுவிட்டு மலையைப் பார்த்து வணங்க வேண்டும். அவ்வாறு சென்றால் உடல்சோர்வு தெரியாது என்ற நம்பிக்கை நிலவுகிறது. மேலும் அக்காடுகளில் உள்ள வனவிலங்குகளால் எத்தகையத் தீங்கும் நிகழக்கூடாது என்ற நம்பிக்கையும் உள்ளது. இக்கற்குவியலுக்கு வண்ணான்குட்டை என்று அழைக்கப்படுகிறது. மலைமக்களுக்குரிய ஆடை முதலான பொருட்கள் செங்கம் நகர் பகுதியில் இருந்து கழுதையின் மூலமாக எடுத்துவரும் நபர்கள் அதிகப்படியான கல்லைப் போடுவதால் வண்ணான்குட்டை என்ற பெயர் இக்கற்குவியலுக்கு வந்துள்ளது.

### 3. இடப்பெயர்வு

கீழூரான் குடியினர் தொடர்ந்து பல இன்னல்களுக்கு ஆளாகி இருக்கின்றனர். கொள்ளையர்கள் இவர்களின் பொருட்களை கொள்ளையடித்து சென்றுள்ளனர். மேலும் தொற்று நோய்கள் இவர்களைப் பெரியஅளவில் துன்புறுத்தி இருக்கின்றது. கொள்ளையர்களையும் கொள்ளை நோய்களையும் “தண்டு என்ற பெயரிலேயே மலை மக்கள் அழைத்திருக்கின்றனர். கொள்ளையர்களிடம் இருந்து தங்களின் பொருட்களை பாதுகாத்துக்கொள்ள மண்ணுக்குள் மறைத்து வைத்துள்ளனர். உயிர் கொல்லி அல்லது தொற்று நோய்கள் வந்தபோது நோய்த் தொற்றுக்கு ஆளானவர்களை விட்டுவிட்டு வேறுயிடத்திற்கு தங்களின் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டதனையும் அறிய முடிகின்றன.

பழங்காலக் குடியிருப்புகள் இருந்ததற்கான சுவடுகள் கீழூர் கிராமத்திற்கு வடதிசையில் உள்ள வேங்கடாசலம் என்பவரின் வயல் பகுதியில் காணப்படுகிறது. அப்பகுதியில் நடுகற்கள் பலவரிசையாக நடப்பட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்புவரை வழிபாட்டில் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். பிள்ளையார் என்ற பெயரில் அப்பகுதி மக்கள் வணங்கி வந்தனர். இரண்டாயிரத்து பதினெட்டாம் ஆண்டு அந்த நடுகற்களை அகற்றிவிட்டுப் பிள்ளையார் உருவம் பொருந்திய சிலை வைத்து அதற்குச் சிறுகோவிலையும் கட்டி வழிபட்டு வருகின்றனர். இப்பகுதியில் மோகனசுந்தரம் என்கிற சிறுவன் விளையாடும்போதும் அம்மிக்கல் ஒன்றும் கற்கருவி ஒன்றும் கிடைத்தன. விளையாட்டுப் பொருளாக அச்சிறுவன் விளையாடி கொண்டிருந்தனை அறிந்து அதனை ஆய்வுக்கு உட்படுத்தியபொழுது பலநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்து அப்பகுதியில் மக்கள் வாழ்ந்து வருவதை உறுதி செய்ய முடிகிறது.

கீழூர் உள்ளிட்ட மலைக் கிராம மக்கள் இறந்து போன முன்னோர்களுக்கு அவர்களின் நினைவாக நடுகல் வைத்து வழிபட்டு வருகின்றனர். பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு வைக்கப்பட்ட நடுகற்கள் மாரியாத்தா, பிள்ளையார் என்ற பெயரில் மாற்றம் எய்தியிருக்கின்றது. இத்தகைய வடிவங்களை க.ராஜன், இராஜவேலு, பூங்குன்றன் முதலிய தொல்லியல் அறிஞர்கள் புதிய கற்காலக் கருவிகள் என கூறுகின்றனர்.

### 4. காவல் தெய்வங்கள்

கீழூர் கிராமத்தில் நான்கு திசைகளிலும் முனிகள் காவல் தெய்வங்களாகக் காணப்படுகின்றன. முனிகள் மக்களைத் துன்புறுத்தாமல் இருப்பதற்கு ஆண்டிற்கு ஒரு

முறை பன்றி குத்தி வழிபடுகின்றனர். இம் மலைக் கிராமத்தில் நடைபெறும் திருமணம் முதலான சுபநிகழ்ச்சிகளை ஊர்மக்கள் நடத்தி வைக்கின்றனர். அதற்குக் கைமாறாகத் திருமண வீட்டார் பன்றி வளர்த்துச் சுத்து முனிகளுக்குப் பலியிடும் நாளன்று ஊர்மந்தையில் கிராம மக்களுக்குக் சமர்ப்பிக்கின்றனர். அப்பன்றிகளை ஊரார் நான்குக் குழுக்களாகப் பிரிந்து ஊரைச் சுற்றி இருக்கும் முனிகளுக்கும் பலியிடுகின்றனர். இவ்வாறு பலியிடுவதால் கிராமத்திற்குள் தீயசக்திகள் வராமல் முனிகள் தடுக்கும் என்கிற நம்பிக்கையில் பலியிடப்படுகிறது.

### 5. காட்டேரி

பேய்களுக்கெல்லாம் பெரிது காட்டேரி எனும் பேய்ஆகும். மலையும் மலை சார்ந்தது இக்கிராமம் அமைந்துள்ளதால், புதர்களும் அடர்ந்தக் காடுகளும் காணப்படுகின்றன. இக்காடுகளில் காட்டேரி பேய் இருப்பதாக தகவலாளர் ரேணுகோபால் 4 கூறுகின்றார். மேலும் அவர் கூறுகையில் “சாதாரண பேய் பிடித்தால் எளிமையாக ஓட்டிவிடலாம். காட்டேரி பேய் பிடித்தால் எளிதாக ஓட்ட முடியாது. எனவே அச்சத்தின் காரணமாகக் காட்டேரியைத் தெய்வமாக வழிபடுகின்றனர் அவ்வாறு வழிபடுவதினால் காட்டேரிப்பேய் பிடிக்காது’’ ஆனி, ஆடி மாதங்களில் ஏதேனும் ஒருநாளில் அக்கிராம மக்கள் ஒன்று திரண்டு காட்டேரியம்மனுக்கு தினைச் சோறு படைத்து, பன்றி, ஆடு, கோழி ஆகிய விலங்குகளைப் பலியிட்டு வருகின்றனர். அவ்வேளை தங்களையும் தங்களது பிள்ளைகளையும் துன்புறுத்தாது காக்கும்படி வேண்டிக் கொள்கின்றனர்.

### 6. வேட்டை தெய்வம்

குலதெய்வமாக வேந்தியப்பனை கீழூர் கிராமமக்கள் வழிபடுகின்றனர். இத்தெய்வத்திற்கு அருகில் வேட்டை தெய்வம் காணப்படுகிறது. வேட்டைச்சாமியைக் குலதெய்வத்திற்கு நிகராக மதிக்கின்றனர். வேட்டைச்சாமி குறித்துத் தகவலாளர் சோ. கோவிந்தன் கூறுகையில்[5] “வனச்சட்டங்கள் தோன்றுவதற்கு முன்பு, வேட்டையாடும் வழக்கம் இருந்தது. மழைக் காலங்களில் ஊரான் கட்டளைக்கு இணங்க கோல்காரர், வீட்டுக்கொருவரை மந்தையில் கூடுமாறு தகவல் சொல்வார். அதனைத் தொடர்ந்து மக்கள் ஊர்மந்தையில் ஒன்று திரண்டு பறையொலி, உருமி மற்றும் கொம் பிசை இசைத்தவாறு குழுமியிருக்கும் மக்கள் ஓ.ஓ.ஓ.குலீலீலீ... என்கின்ற ஓசையுடன் ஊர்ப்புறத்தில் இருக்கும் வேட்டைச் சாமியை நோக்கி ஓடுகின்றனர். அங்கு வேட்டை சாமிக்கு புதுமலர் தூவி, நீர் ஊற்றி வேட்டை கிடைக்குமா? என்று பூவைத்துக் கேட்க்கின்றனர். பூ சாமியின் மடியில் விழுந்தால் வெகுண்டெழுந்து காட்டிற்குள் ஓடுகின்றனர். விலங்குகளை வேட்டையாடுதல் தடுப்புச் சட்டம் வந்த பிறகு வேட்டையாடுதல் வழக்கம் இல்லாமல் போயிற்று. நான் சிறுவனாக இருக்கும் போது இவ்வழக்கத்தைக் கண்டுள்ளேன். தற்போது வேட்டைத் தெய்வத்திற்கு ஆனி, ஆடி மாதங்களில் ஏதேனும் ஒரு நன்நாளில் மூன்று ஆட்டுக் கிடாய்களுடன் பொங்கலிட்டுப் பலியிடுகின்றனர். இந்நிகழ்வினை வேட்டைச் சமூகத்தின் நீட்சி எனலாம்.

### 7. மேய்ப்பான்

காடுகளில் வனவிலங்குகளை மேய்க்கும் தெய்வம் உள்ளது எனும் நம்பிக்கை நிலவுகிறது. அதற்கு மேய்யப்பான் என்ற பெயரில் நடுகல் வைத்து வழிபட்டு வருகின்றனர். வேட்டைச் சாமியை வழிபடும் நாளன்றே மேய்ப்பான் சாமியையும் வழிபடுகின்றனர்.

### 8. மாரியம்மன் கோவில்

கீழூர் கிராமத்தின் ஊர்மந்தையில் மாரியம்மன் கோவில் அமைந்துள்ளது. ஆடிமாதத்தில் ஊர் மக்கள் ஒன்று திரண்டு கூழ் ஊற்றி வருகின்றனர். அம்மாதத்தில் மூன்றாவது வெள்ளிக்கிழமை அந்த கூழ் ஊற்றும் நிகழ்வு நடைபெறுகின்றது. அம்மனுப்பும் நாளன்று பறை, கொம்பு, உருமி ஆகிய இசைக்கருவிகளை இசைத்துச் சாமி

அழைத்துவிடும் நிகழ்வு நடைபெறுகின்றது. குழுமியிருக்கும் நபர்கள் மேல் சாமி வந்து ஆடுகின்றது. பூசாரி தான் நினைத்தப் பொருளைச் சாமி வந்த வரை எடுக்கச் சொல்கிறார். பூசாரி நினைத்த பொருளை யார் சரியாகச் சொல்கிறாரோ அவர்மேல் உண்மையான சாமி வந்திருப்பதை உறுதிபடுத்துகின்றனர். சாமி வந்தவர் ஊர் மக்களுக்கு வரயிருக்கும் நன்மை தீமைகள் குறித்துக் கணித்துச் சொல்கின்றார். மக்கள் தீமைகளைத் தடுக்க வேண்டுமென்று மாரியம் மனிடம் மன்றாடுகின்றனர். அதற்கு பன்றிகள் பலவற்றைப் பலியிடுவதாகவும் வேண்டிக் கொள்கின்றனர். மாரியம்மன் இசைவு தெரிவித்தவுடன் குழுமியிருக்கும் மக்கள் ஓ.ஓ.ஓ.குலீலீலீ... ஓசையை எழுப்பியவாறு அம்மனுக்குப் படைக்கப்பட்ட பொருள்களை வாழை இலையில் கட்டிக் கொண்டு அருவியுள்ள மடுவுப் பகுதியில் அமர்த்துகின்றனர். இம்மரபு தொன்றுதொட்டு நிகழ்ந்து வருகின்றது.

### 9. முடிவுரை

ஜவ்வாதுமலைப் பகுதியில் புதூர் நாடு கிராம ஊராட்சிப் பகுதியில் அமைந்திருக்கும் கீழூர் என்பதற்கான பெயர்க் காரணத்தையும், அம்மக்களின் குடியிருப்புகள் பற்றியும் இக்கட்டுரை விளக்குகிறது. சேவை மணங்கள் செய்துகொண்டு தங்கள் குடிகள் பிற கிராமங்களில் குடிபெயர்ந்து உள்ளதையும், கீழூர் கிராமத்தில் இடம் பெற்றிருக்கும் குலதெய்வங்கள், காவல் தெய்வங்களை வழிபடும் முறைகளையும் இக்கட்டுரைவிவரித்துள்ளது.

### அடிக்குறிப்பு

1. மோட்டாத்துக்கன் வயது-68, மேலூர், புதூர் நாடு.
2. வேந்தன், வயது-70, கீழூர், புதூர் நாடு.
3. ரேணுகோபால், வயது-60, கீழூர், புதூர் நாடு.
4. ரேணுகோபால், வயது-60, கீழூர், புதூர் நாடு.
5. சோ.கோவிந்தன், வயது-65,கீழூர், புதூர் நாடு.
6. சின்னத்துக்கன், வயது-57, கீழூர், புதூர் நாடு.

### பின்னிணைப்புகள்- 1 புகைப்படங்கள்



காட்டேரி அம்மன் வழிபாடு



வண்ணான் குட்டை